# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


ஊடகச்செய்தி எண்: நாள்: 12.01.2024

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத்தலைவர் மு.பாஸ்கரன் மற்றும் பொதுச்செயலாளர் மு.சீனிவாசன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடகச்செய்தி:

**ஊடகச்செய்தி**

**10.01.2025 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்த பென்சன் சம்பந்தமாக தெரிவித்த கருத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.**

இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டில் காணொலி வாயிலாக கலந்துகொண்டு கழக ஆட்சி வந்தால் பழைய பென்சன் உட்பட உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என அறிவித்தார். அதுமட்டுமின்றி 2021 தேர்தலின்போது

**சட்டப்பேரவை தேர்தல் - 2021**

**தி.மு.க.தேர்தல் அறிக்கை**

**309. புதிய ஓய்வூதியத்திட்டம் கைவிடப்பட்டு பழைய ஓய்வூதியத்திட்டம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்படும்.**

என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தேர்தலின் தி.மு.க. வெற்றிபெற வேண்டுமென்ற ஆர்வத்தோடு ஆதரவு தெரிவித்தனர். தேர்தல் முடிந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு உங்களது கோரிக்கைகளை நான் மறக்கவில்லை, மறுக்கவில்லை, மறைக்கவில்லை என வாக்குறுதியளித்தார். எனவே, புதிய பென்சன் திட்டத்தில் உள்ள 6,14,175 பேர் விரைவில் இந்த அரசு பழைய பென்சன் திட்டத்தை அமுல்படுத்தும் என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

ஆனால், கடந்த 10.01.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசு அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்திற்கான மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்ட பின்பு அத்திட்டம் செயல்படுத்த ஆலோசிக்கப்படும் என அறிவித்துள்ளது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஏற்கனவே, மத்திய அரசு அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பாதகமானது எனவும், அத்திட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெறவேண்டுமெனவும், புதிய ஓய்வூதியத்திட்டத்தின் மறுவடிவமே

ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம். எனவே, புதிய ஓய்வூதியத்திட்டத்தின் நிதி மேலான்மைக்குழு (Pension Fund Reguletory and Development Authority ) வை கலைத்திட வேண்டும், பழைய ஓய்வூதியத்திட்டத்தை மீண்டும் அமுல்படுத்திட வேண்டுமென வலியுறுத்தி கடந்த 08.10.2024 அன்று மாநிலம் முழுவதும் மாவட்டத்தலைநகரங்களில் மாலை நேர தர்ணா போராட்டத்தை எழுச்சிகரமாக நடத்தியுள்ளோம். எனவே, தமிழக அரசு தற்போது அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்தை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

தமிழ்நாடு அரசு மத்திய அரசின் மக்கள் விரோத, மாநில உரிமைகளுக்கு எதிரான சட்டங்களை திட்டங்களை மிக வலிமையாக எதிர்த்து குரல் கொடுத்துவருகிறது. ஆனால், அரசு ஊழியர் ஆசிரியர்களின் அந்திமக் காலத்தை கேள்விக்குறியாக்கும் புதிய ஓய்வூதியத்திட்டத்தை இரத்து செய்து பழைய ஓய்வூதியத்தை அறிவிப்பதில் மத்திய அரசின் அதே ஊழியர் விரோத கொள்கையை நடைமுறைப்படுத்த நினைப்பது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது. தமிழ்நாடு அரசின் தேர்தல் வாக்குறுதிக்கு எதிராக உள்ளது.

இதுமட்டுமல்ல, சட்டமன்றத்தில் நாகை.மாலி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு முழுமையாக பதிலளிக்காதது ஏமாற்றமளிக்கிறது. குறிப்பாக, படித்த இளைஞர்கள் 64,22,000 பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்பதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் அரசுத்துறைகளில் காலியாகவுள்ள 5,00,000/- பணியிடங்களை நிரப்பிட காலம் கடத்தப்பட்டுவருகிறது. அவ்வாறு குறைந்த அளவில் நிரப்பப்படும் பணியிடங்கள் கூட தொகுப்பூதிய, மதிப்பூதியம், Out Sorucing முறையில் நிரப்பப்படுவது சமூக நீதி காத்திடும் அரசு என்பதன் பொருள் கேள்விக்குறியாக்கியுள்ளது. இதனால் அரசு அலுவலகங்களில் மாலைநேர, இரவு நேரங்களில், அரசு விடுமுறை நாட்களில் கூட அலுவலர்கள் பணிபுரியும் நிலை ஏற்பட்டு மிகுந்த மன உளைச்சலுக்கு அளாகிவருகிறார்கள். அரசு ஊழியர்கள்/ ஆசிரியர்களின் சரண் விடுப்பு ஊதியத்தை கூட மீண்டும் அமுல்படுத்த தமிழ்நாடு அரசு தயக்கம்காட்டிவருவது மிகுந்த வேதனை அளிக்கக்கூடியதாக உள்ளது.

சிறப்பு கலமுறை ஊதியத்தில் பணிபுரிந்து வரும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் காலமுறை ஊதியம் பெறவோம் என எதிர்பார்த்திருந்த நிலையில் அரசாணை எண் 95 ன் மூலம் சமையல் உதவியாளர்கள மாதம் ரூ.3,000/- சொற்ப ஊதியத்தில் நியமிக்கப்படுவார்கள் என அறிவித்தது, சாலைப்பணியாளர்களின் 41 மாத கால பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையானது உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தும் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது போன்றவை இந்த அரசின் மீதான அதிருப்தியை அதிகமாக்கியுள்ளது. மேற்கண்ட கோரிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசின் தேர்தல் கால வாக்குறுதியில் ஏற்கனவே, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் என **மறக்கப்பட்டதை, மறைக்கப்பட்டதை, மறுக்கப்பட்டதை** நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

எனவே, தமிழ்நாடு அரசு மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் ஒருங்கிணைந்த ஓய்வூதியம் பற்றி அறிவித்த கருத்தை உடன் திரும்பப்பெற வேண்டும். பழைய ஓய்வூதியத்திட்டத்தை உடன் அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தேர்தல் கால வாக்குறுதிகளை அமுல்படுத்திட வேண்டும்.

இல்லையெனில், கடந்த டிசம்பர் மாதம் 13, 14 தேதிகளில் தூத்துக்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 15ஆம் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அறைகூவல் தீர்மானத்தின்படி தமிழகமெங்கும் மிக வலுவான ஒன்றுபட்ட காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தவேண்டிய நிர்பந்தத்திற்கு அரசு ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை தமிழ்நாடு அரசிற்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுச்செயலாளர்